# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

## அசல் வழக்கு எண். 34/2016

இன்று 2025 ம் ஆண்டு நவம்பர் 24 நாள் திங்கள் கிழமை இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின்) திருமதி.A.சுபஸ்ரீ,L.L.M., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | சசிகுமார் |
| தந்தை பெயர் | : | வேலுசாமி |
| வயது | : | |
| தொழில் | : | VAO, நெருப்பெரிச்சல் |

---

**முதல் விசாரணை**

1. எங்களுது ஆர்.எஸ்.ஆரில் 119/1C2 என்னவாக உள்ளது என்றால் 0.05 புஞ்சை ஹக்டர் பட்டா எண். 1768 முத்துசாமி கவுண்டர் மகன் கிருஷ்ணமூத்தி பெயரில் உள்ளது. அது என்ன வகைப்பாட்டில் உள்ளது என்றால் ரயத்வாதி புஞ்சை என்ற பெயரில் உள்ளது. அது ஒரு இடம் என்றால் கைப்பற்றுதாரரின் பூமியாகும். **ஆர்.எஸ்.ஆரின் சான்றிட்ட நகலை நீதின்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது. சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.** என்னிடம் காட்டப்படுவது மேற்படி பூமிக்கு உண்டான பட்டா எண். 1768 என்றால் அதில் குறிப்பிட்டுள்ள தேதியின் படி சரிதான். பட்டா எண். **1768 கணினி நகல். சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது.** மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பட்டா எண். 1768 பெறுத்து வகைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு இருந்தால் எங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு எங்கள் ஆவணங்களிள் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கும்.

2. 119/1C2 வில் அடங்கள் யார் பெயரில் என்ன வகைப்பாட்டில் உள்ளது என்றால் ரயத்வாரி புஞ்சை, கிருஷ்ணமூர்த்தி வகைரா என்ற பெயரில் உள்ளது. அது கிருஷ்ணமூர்த்தி வகைரா என்று அர்த்தம் கொள்ளலாமா என்றால் அது பற்றி தெரியாது. பயிர் சாகுபடி செய்யப்பட்டு இருந்தால் அடங்களில் அது குறித்து பதிவுகள் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் ஆவணங்கள் படி 119/1C2 தடம் என்று எங்கும் இல்லை என்றால் ஆவணக்குறிப்பில் அவ்வாறு இல்லை, ரயத்வாரி புஞ்சை என்று தான் உள்ளது. **அடங்கள் சான்றிட்ட நகல் சா.சா.ஆ.3 ஆகு குறியீடு செய்யப்பட்டது.**

(வாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.24 15:11:46 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.